**பிபில பிரதேச சபை - 2022**

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிபில பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிபில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் நேரடி அனுப்புகையாக கிடைத்திருந்த ரூபா 150,000 ஆன சதோச கடை வாடகை வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | இதனை 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | அனைத்து வருமானங்களும் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப்பொறுப்பில் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 204,515 தொகை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 309,322 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த தொகையை நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத ஒதுக்கீடுகளின் போது தவறு இடம் பெற்றுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது மேலும் பரிட்சித்து சீராக்குவதற்கு கணக்கீடு செய்வதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 1,769,454 பெறுமதியான 04 நிறுவனங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை | இந்நிர்மாணங்களின் பெறுமதி 2023 ஆம் ஆண்டின் கணக்கினை தயாரிக்கும் போது மூலதனமாக்கு வதாக தயவுடன் அறியத் தருகிறேன். | சரியான பெறுமதி இனங் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரை கட்டண மீதி ரூபா 8,347,185 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் 5,937,780 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,318,488 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | இத் தவறினை 2023 ஆம் ஆண்டின் கணக்கினை தயாரிக்கும் போது சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வு கட்டணங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஒதுக்கீடுகள் சரியாக மேற் கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 <u>இணங்காத கணக்குகள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபையால் பராமரித்துச் செல்லபடுகின்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 02 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 49,063,001 ஒன்றாக இருந்த போதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அது ரூபா 49,307,573 என காண்பிக்கப்பட்ட இருந்தது. | இத்தவறினை 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஆ) சபையால் நடாத்திச் செல்லப்படுகின்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 03 வாகனங்களின் பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் அவ்வாகனங்களுக்காக காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிக்கு இடையே ரூபா 1,043,000 ஆனா வேறுபாடு அவதானிக்கப்பட்டது | 2023 ஆம் ஆண்டின் கணக்கிணைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 <u>கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 81,330,258 கூட்டுப்பெறுமதியான 03 சொத்து விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கற்பனை சொத்துக்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றின் பெறுமதிகளில் சரியானதன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் குறித்த ஆவணங்களை தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன் | சபைக்கு சொந்தமாக காணப்படும் சொத்துக்களை சரியாக பதிவேடு களுக்கு உட்படுத்தப்பட வேண்டியதுடன் அந்த ஆவணங்களை நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் (ii) 154(1) ஆம் பிரிவு . | பிரதேச சபை எல்லைக்குள் ஏல விற்பனை செய்யப்படுகின்ற காணி ஒன்றில் அந்த காணி விற்பனையால் கிடைத்த தொகையில் 1 சதவீத தொகையினை பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய போதிலும் பிபில பிரதேச சபை எல்லையில் ஏல விற்பனை செய்யப்பட்ட 190 காணிகளில் இருந்து குறித்த வரித் தொகை அறியப்பட்டிருக்கவில் | பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஒரு சதவீத வரி தொகை கொடுப்பனவு செய்யுமாறு குறித்த ஆதன கம்பெனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | பிரதேச சபைக்கு எல்லைக்குள் ஏல விற்பனை செய்யப்படும் காணி தொடர்பில் பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 572 | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 596,783 ஆன போது வைப்புக்கள் மீதிகள் விடுவிக்கப்பட்டு இருக்கவில்லை. | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் பதிவேடுகள் காணப்படும் தொகை தொடர்பாக வைப்பாளர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி பணத்தை விடுவிப்பதற்கும் முன்வராத வைப்பாளர்களின் பணத்தை சபை வருமானத்துக்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,142,593 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,675,307 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 12,785,798 | 9,668,114 | 2,441,188 | 7,226,926 | 9,261,367 | 8,218,569 | 2,037,712 | 6,180,857 |
| (ii) | வாடகை | 24,130,946 | 23,375,625 | 16,898,884 | 6,476,740 | 24,319,881 | 20,295,167 | 13,769,660 | 6,525,506 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,040,400 | 1,737,350 | 1,457,900 | 279,450 | 2,350,700 | 1,259,080 | 1,141,030 | 118,050 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,392,500 | 25,434,313 | 13,563,160 | 11,871,153 | 13,417,500 | 35,227,751 | 28,284,837 | 6,942,914 |
| | | 42,349,644 | 60,215,402 | 34,361,132 | 25,854,269 | 49,349,448 | 65,000,567 | 45,233,239 | 19,767,327 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 60,215,402 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதிவரை ரூபா 25,854,269 அறவிடப்படாததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 42 சதவீதம் ஆகும் | 2021/2022 ஆம் ஆண்டுகளின் போது காணப்பட்ட கோவிட் தொற்று நிலைமை காரணமாக வெளிக்களத்தில் சென்று பணத்தை சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வது சிக்கலாக இருந்தமை மற்றும் நாட்டில் காணப்பட்ட சீரற்ற பொருளாதார நிலைமை இதற்கு தாக்கம் அளித்துள்ளது | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட | அத்தொகையை அறவிடுவதற்காக வீதவரியாளர்கள் அறிவுறுத்தப்பட்டு நிலுவை | சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய வீதவரி ரூபா 6,035,662 தொகை தொடர்தும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன மேலும் காணப்படும் நிலுவைத் தொகையை அறவிடுவதற் காக நடமாடும் சேவைகள் மற்றும் ஆவணங்களை தடைசெய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | நடவடிக்கை எடுத்தால் வேண்டும் |
| (இ) | சபைக்கு சொந்தமான 14 ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக 2007 ஆம் ஆண்டு முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 4,191,080 ஆன. குத்தகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபைக்குரிய 178 கடைகளுக்கான 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் ரூபா 2,311,948 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது அறவிடுவதற்கு உள்ள நிலுவையில் வாடகை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | பிரதேச சபைக்கு உரிய நீர் செயற்திட்டத்தின் 724 நீர் பாவனையாளர் களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,163,228 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிலுவையிலுள்ள நீர் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதற்கு அனைத்து நீர் பாவானையாளர்களுக்கும் கடிதங்கள் மூலம் அறிவிக்கபப்பட்டுள்ளதுடன் நிலுவை நீர்க்கட்டணத்தை செலுத்ததாத நீர் பாவனையாளர்களின் நீர் இணைப்பினை துண்டிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் வெவ்வேறு நிறுவனங்களால் / ஆட்களால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 13 நிலையான விளம்பர பதாதைகளிலிருந்து 2020 ஆம் ஆண்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப் வேண்டிய ரூபா 279,450 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலையான நிலுவை விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருமான பரிசோதகரால் கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு விளம்பர பதாதைகள் இனங்காணப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிட மிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 784,647 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 8,347,185 ஆக இருந்தது. . | நிலுவைத் தொகையில் ஒரு ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதாகவும் எஞ்சியவற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிய தருகின்றேன் | சபைக்கு பெறவேண்டிய நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் நிதியத்தின் மூலம் பகல் நேர காப்பு நிலையம் ஒன்றும் ஆயுர்வேத மற்றும் பொது பயன்பாடுகள் சேவை நிலையம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கான கேள்வி கோருவதற்கு பத்திரிகை விளம்பரத்திற்காக 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி ரூபா 128,887 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்த போதும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | இத்திட்டத்திற்காக தேவையான நிதியை ஏற்பாடு செய்து கொள்ளப்பட்ட பின்னர் செயற்படுத்துவதாக அறிய தருகிறேன். | பெறுகை நடவடிக்கைகளை விளம்பத்தை வெளியிடுவதற்கு முன்னர் நிதி ஏற்பாட்டை மேற்கொண்டு ஆரம்ப பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் இறுதியாக வீதவரி மதிப்பீடு 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் காலரீதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீட்டு செயற்பாடுகளுக்காக தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருவதாக அறிய தருகிறேன். | வீதவரி காலரீதியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 <u>மனித வள முகாமைத்துவம்</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 07 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 12 ஊழியர்களின் பற்றாக்குறை | பதவியணி அறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கையில் காணப்படும் இந்த வெற்றிடங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை ஒன்று ஒவ்வொரு மாத | பதவியணி வெற்றிடங்களின் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| யொன்று காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்திலும் உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வழங்குவதாக அறியத் தருகிறேன். | . |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 69,450 மற்றும் ஆண்டில் 5 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 134,215 என்ற வழங்கக்கூடிய ஆகக்கூடிய எல்லையைக் மிகைத்து இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. | இதன் பிறகு ரூபா 250,000 எல்லைக்கு உட்பட்டு இடர் கடன் வழங்குவதாகவும் தற்போது 250000 எல்லையை மிகைத்து செலுத்தியுள்ள இடர் கடன் தொகையை பல தவணைகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உத்தியோகத்தர் களுக்க கடன் வழங்கும் உயர்ந்த எல்லையை மீறக் கூடாது |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 3 சதவீதம் முதல் 146 சதவீதம் வரையிலும் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 6 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக் கப்பட்டதால் வருமான செலவின கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | நாட்டில் காணப்பட்ட கோவிட் நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட பாதகமான அரசியல் நிலைமை காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் போது விலகல்களை குறைக்கும் வகையில் பாதீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சரியாக பாதிரி தயாரிக்கப்பட்டு அதில் இலக்கு நிறைவேற்றப்படவே ண்டும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு கவனமாக நடவடிக்கை எடுத்து பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |